சுருக்கம்

தொழில் துறை – தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் – "உயிரி தொழில்நுட்ப மூலதன முதலீட்டு நிதி "Biotechnology Venture Capital Fund" உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்ஐஇ.1) துறை

அரசாணை (நிலை) எண்.252

நாள்: 13.10.2015
மன்மத – புரட்டாசி 26,
திருவள்ளுவர் ஆண்டு –2046
படிக்கப்பட்டது:

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கடிதம் எண்.D/GMR/Venture Capital 2015, நாள் 8.6.2015.

---

ஆணை:

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "உயிரி தொழில்நுட்ப மூலதன முதலீட்டு நிதி" உருவாக்குதல் குறித்து கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிட்டார்கள்:

"உயிரி தொழில்நுட்ப கொள்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 50 கோடி ரூபாய் நிதியுடன் "உயிரி தொழில்நுட்ப மூலதன முதலீட்டு நிதி "Biotechnology Venture Capital Fund" ஒன்று உருவாக்கப்படும். இந்த நிதிக்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO 10 கோடி ரூபாயும், டைடல் மற்றும் டைசல் நிறுவனங்கள் இணைந்து 10 கோடி ரூபாயும், மாநில அரசு 5 கோடி ரூபாயும் அளிக்கும். தனியார் பங்களிப்பு மூலம் 25 கோடி ரூபாய் நிதி பெறப்படும்".

2. மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இந்நிதியம் குறித்த ஒரு விவரக் குறிப்பு அனுப்பியிருந்தது. அக்குறிப்பின் மீதான முதற்கட்ட பதில் அரசுக் கடிதம் எண்.3602/எம்.ஐ.இ.1/2015–3, தொழில் துறை, நாள்:12.10.2015–ல் டிட்கோ நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது (நகல் இணைக்கப்பட்டுள்ளது). இவற்றினையும் கருத்தில் கொண்டு மேற்காணும் உயிரி தொழில்நுட்ப மூலதன முதலீட்டு நிதி உருவாக்குதல் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இதுகுறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தகுந்த கருத்துருக்களை அரசுக்கு அனுப்பிவைக்கவும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் அவர்களை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
டிட்கோ,
19–ஏ, ருக்மணி இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

மேலாண் இயக்குநர்,
டைடல் பூங்கா நிறுவனம்,
4, ராஜீவ் காந்தி சாலை, சென்னை – 600 113.

மேலாண் இயக்குநர்,
டைசல் உயிரி பூங்கா நிறுவனம்,
தரமணி சாலை, தரமணி, சென்னை – 600 113

நகல்
தொழில் (வசெதி) துறை, சென்னை – 9.
தொழில் (அநமு.2) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 13.10.2015

13.10.15